இலங்கை 6 விலை சதம் 40

ஈழநாடு

The EELA NADU

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka Under No QB/8945/78

கலை 21 புரட்டாசி 12 ஜுல்ஹஜ் 5 இதழ் 228

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 28-9-79

UNIVERSITY OF SRI LANKA RECEIVED 1979-9-28 PERIODICALS DIVISION LIBRARY

∴ பலவித பள்ளிப் பொருட்கள்,
∴ பரிசுப் பொருட்கள்,
∴ றெடிமேட் உடைகள்,
∴ கலர், கறுப்பு வெள்ளைப் பிலிம்கள்

யாவற்றையும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

அத்துடன்

எந்த வைபவத்தையும் கண்கவர் கலர், கறுப்பு வெள்ளைப்படங்களாக எடுத்த சகாய விலையில், அதிவிரைவில் தருவோம்.

தொடர்பு கொள்க.

கிருபா கிவ்ற் கவுஸ்
46, பெரிய கடை
யாழ்ப்பாணம்

கைத்தொழில் துறையில் பிரபல்யமான சாதனங்கள், பல்வேறு கருவிகள்.

WOLF | வூல்ப்

கிறைன் ரெட்சி, சோஸர்கள், புளோரவேஸ், மற்றும்பல, இலாபகரமானது நீடித்த பாவனை, பயமின்றிப் பாவிக்கலாம்.

ஏகவிநியோகத்தர்:

நியுரோன் எலெக்றிக்கல்ஸ்,
141 - 143 ஸ்ரான்லிவீதி,
யாழ்ப்பாணம்

போன்: 7016

ஐநூறு ஆசிரியர்களுக்கு ஜனவரி முதல் பதவிஉயர்வு!

(தொழிற்பு)

தற்போது சேவையிலுள்ள 500 ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு வழங்கக்கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது.

ஜனவரி முதலாம் திகதியிலிருந்து இந்த பதவி உயர்வு வழங்கப்படும். பிரதான கல்வி பதிகாரிகள், கல்லூரி அதிபர் கள் ஆகிய தரங்களிலிருந்து இப்பதவி உயர்வு வழங்கப் படும்.

இதே வேளையில் ஒக்டோபர் முதலாம் திகதியிலிருந்து 700 கணித விஞ்ஞான ஆசிரியர்களை நியமனம் செய்ய கல்வியமைச்சு முடிவு செய்துள்ளது

இந்த ஆசிரியர்களுக்கு 58 வயதுக்குமேல் சேவைநீடிப்பு

(தொழிற்பு)

விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், அழகியற்கலை ஆகிய பாடங்களில் விசேடபயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு 58வயதுக்கு மேலும் சேவை நீடிப்பு வழங்கக்கல்வியமைச்சு முடிவு செய்துள்ளது.

கஷ்டப்பிரதேசங்களில் பணிபுரிந்த ஆசிரியர்களுக்கும் 58 வயதுக்கு மேல் சேவை நீடிப்பு வழங்கப்படுமெனக்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது (இ)

1981ம் ஆண்டில் அரிசியில் தன்னிறைவு

(தொழிற்பு)

1981ம் ஆண்டு அரிசியிலும் ஏனைய உப-உணவுப் பொருட்களிலும் நாடு தன்னிறைவு காணமுடியும். இதற்கான நிவிர முயற்சியில் விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயக்கா கூறினார்.

1990ம் ஆண்டு சீனியில் தன்னிறைவு காணமுடியுமென்றும் அமைச்சர் சொன்னார்.

இத்துறைகளில் தன்னிறைவு காண்பதற்குத் தமது அமைச்சு தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளதென்றும் அமைச்சர் சொன்னார்.

இந்தக் குறிக்கோளை அடைவது கஷ்டமானாலும் முடியாத காரியமல்ல இதற்கு நேர்மையான தலைமையும், நியாயமிக்கதையுமே அவசியமென்றார் அமைச்சர்.

பத்திரிகையாளர் மாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகரசபை முதல்வர் திரு இராஜா விஸ்வநாதன், அடுத்தமாதம் 15ம் திகதி பிற்பகல் பத்திரிகையாளர் மாநாடொன்றைக் கூட்டவிருக்கின்றார். இம்மாநாட்டில் ஆணையாளர் திரு கே. சிவஞானசுந்தரம், மற்றும் சபை உத்தியோகத்தர்கள் கலந்துகொள்வார்கள். (உ)

வாணிவிழாவில் மாவட்ட அமைச்சர் கலந்துகொள்வார்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய விற்பனை திணைக்கள அலுவலகத்தில் இன்று நடைபெறும் வாணிவிழாவில் யாழ் மாவட்ட அமைச்சர் திரு யு. பி. விஜயலக்கோன், யாழ் அரசாங்க அதிபர் திரு மகேந்திரா துரைசுவாமி ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்கள்.

இன்றுபிற்பகல் நடைபெறும் இவ்விழாவில் பண்ணிசைச் செல்வன் திரு எஸ் ஆர் திரு ஞானசம்பந்தன் பண்ணிசைக் கச்சேரி நிகழ்த்துவார். (உ)

இரத்தினபுரியில் பெருவெள்ளம் ஒருபகுதி நீரில் மூழ்கியது

கிழக்கு மாகாணத்தில் பயிர்கள் நாசம் வங்காள விரிகுடாவில் பவன அழுக்கம்

(தொழிற்பு)

நாட்டின் பல பாகங்களிலும் பொதுவாகக் கடும் மழை பெய்துள்ளது.

இரத்தினபுரி நகரின் பெரும் பகுதி வெள்ளத்தால் மூழ்கியுள்ளது. இங்கு [illegible] வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இரத்தினபுரிக்குத், ஏனைய நகரங்களுக்குமான சாலைத் தொடர்புகள் பல இடங்களில் துண்டிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் மழை காரணமாகப் பயிர்களுக்குப் பெரும் சேதமேற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

[illegible] கிளை, [illegible] வாழை [illegible] சேதமடைந்துள்ளன.

இரத்தினபுரியில் வெள்ளத்தில் சிக்கிய மக்களுக்கு உதவுவதற்காகப் பொலிஸ் பகுதியினரும், பொதுநல விதாபனங்களும் தீவிர நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள காற்று அழுக்கமே இதற்குக் காரணமென்று கூறப்படுகிறது. இது மேலும் மோசமடைந்து சூறாவளியாக உருவெடுக்கக்கூடும் என்றும் வானிலை ஆராய்ச்சி நிலையத்தினர் கருதுகின்றனர்.

வேலணை ப. நோ. கூ. ச. கூட்டணி வெற்றி

(வேலணை)

நேற்று நடைபெற்ற வேலணைப் பனநோக்குக் கூட்டுறவுச் சங்க நெறியாளர் குழுவிற்கான தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் போட்டியிட்ட ஐவரும் வெற்றிபெற்றுள்ளனர்.

திருவாளர்கள் சி இராஜரெட்ணம், நி பாலச்சந்திரன், செ. கிவலோகநாதன் சா. தொபியாஸ், ஜ. பொன்னையா ஆகியோரே வெற்றி பெற்றவர்களாவர். (கு)

சுவாமிநாதன் ராஜினாமா

செகீன, செப். 27

இந்திரா காங்கிரஸ்கட்சி தமிழ்நாடு தலைவர் திரு ஆர் வி சுவாமிநாதன் லோக்சபாத் தேர்தலில் போட்டியிடுவதற்காக தலைவர் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்தில்

புதிய மாணவர்களுக்கு பழைய மாணவர் வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் புதியமாணவர்களுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன. புதிய மாணவர்களை நல்லமுறையில் வரவேற்பதுடன் யாழ் பல்கலைக்கழகத்தில் தனித்துவத்தையும், கலாசாரத்தையும் பேணும் வகையில் நடந்து கொள்வதென மாணவர் அவை முடிவுசெய்துள்ளதுடன் புதிய மாணவர்களு இன்று தேநீர் விருந்துபசாரமும் அளிக்கவுள்ளனர்.

இதுதொடர்பாக மாணவர் அவைத்தலைவர் திரு. எவி. தெய்வேந்திரராசா பெரியிடுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

ஆறுவருடங்களில் ஒன்றாக விருந்த எமது வளாகம் இன்றைய நிலையில் பல்கலைக்கழகமாகத் தனித்துவம் பெற்று திகழ்வதுடன் ஓர் இளமைத் துடிப்பு மிக்க யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாகவும் திகழுகின்றது. மிகவேகமாக வளர்ந்து வருகின்ற இவ்வேளையில் உங்கள் வருகை எங்களுக்கு உறுதுணையாக இருப்பதுடன் மேலும் இப்பல்கலைக்கழகத்திற்கு மெருகூட்டுவதாயும் அமையும் என்பதில் ஐயமில்லை பலபடிகளையும், தடைகளையும் தாண்டிவந்து எம்முடன் ஒன்றாக இணையும் நீங்கள் மிகப் பொறுப்பு வாய்ந்தவர்களாகவும் விளங்குகின்றீர்கள்.

"தமிழ்ப் பிரதேசத்தில் காணப்படும் ஒரேயொரு பல்கலைக்கழகமான இதற்குக் காலடி எடுத்து வைக்கும் நீங்கள் எமது பிரதேசத்தில் தனித்துவத்தையும் தார்ப்பரியத்தையும் உணர்ந்து செயலாற்றுவதுடன் வளர்ந்துவரும் பல்கலைக்கழகத்தினால் ஏற்படக் கூடிய தடைகளையும் இடையூறுகளையும் படிக்கற்களாகச் செய்து புகழ்பெறுங்கள் என எண்ணுகிறோம் (கு)

தமிழ்ப்பகுதிதபாலகங்களில் தமிழில் நிர்வாகம்

அரசைக்கோரும் பிரேரணை வருகிறது

(பண்டத்தரிப்பு)

"அரசாங்கத்தின் தற்போதைய மொழிக்கொள்கைக்கமைய தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள அஞ்சல் அலுவலகங்களிலும் உப அஞ்சல் அலுவலகங்களிலும் தமிழ்மொழியில் நிர்வாகம் நடைபெற ஒழுங்கு செய்யப்படவேண்டும்"

இவ்வாறு தபால் - தந்தித் தொடர்புகள் அமைச்சரைக் கேட்டுக்கொள்ளும் பிரேரணை ஒன்று எதிர்வரும் 30ம் திகதி யாழ்ப்பாண மத்தியகல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இலங்கை உப-அஞ்சல் அதிபர்கள் சங்கத்தின் ஆறாவது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

சங்கத் தலைவர் திரு ச இராஜலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் பிரதம அதிதியாக எதிர்க்கட்சித் தலைவர் திரு அ அமிர்தலிங்கம் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினராக சங்கப்போஷகர்களில் ஒருவரும் கோப்பாய்த் தொகுதி எ பியுமான திரு எஸ் கதிரவேலுப்பிள்ளை கலந்துகொள்ளுவார்.

இக்கூட்டத்தில் சமர்ப்பிக்க முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டிருக்கும் இதர முக்கிய பிரேரணைகள் பின்வருமாறு:—

அரசாங்க திணைக்களங்களிலிருந்தும் மற்றும் அலுவலகங்களிலிருந்தும் உப-அஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பப்படும் சகல சிங்கள மொழியிலான கடிதங்கள், சுற்றறிக்கைகள் ஆகியனவற்றிற்குதமிழ்மொழி பெயர்ப்புடன் இணைத்து அனுப்பி வைக்கப்படவேண்டும்.

அஞ்சல் அலுவலகம் உப அஞ்சல் அலுவலகங்களின் பாவிக்கப்படுவதால் பாவுந் தமிழ்மொழியிலும் அச்சிடப்படவேண்டும்.

உப அஞ்சல் அலுவலக அதிபர்கள் அனைவரையும் கூட்டி வழங்குசபையின் உறுப்பினராக சேர்த்துக்கொள்ளவேண்டும்.

உப அஞ்சல் அதிபர்களை நிரந்தர அரச ஊழியர்களாக கருதி ஓய்வூதியப்பணம் வழங்கப்படவேண்டும்.

வர் விளம்பரம்

தேவை

காசாளர் | எழுதுவினைஞர் ஒருவரும் ஆங்கிலம், வர்த்தகம், அளவையியல், விலங்கியல், தாவரவியல் ஆகிய பாடங்கள் கற்பிக்க ஆசிரியர்களும் 10-10-1979க்கு முன் விண்ணப்பிக்கவும். நியூ பிறிலியன்ட் விநிலையம், இல:76, ஆஸ்பத்திரிவீதி, (வி எம். எஸ். கட்டிடத்திற்கு எதிராக) யாழ்ப்பாணம். 3679

அனுபவமுள்ள தமிழ், ஆங்கிலம் அச்சுக் கோர்க்கப்பவர் தேவை அத்துடன் மெசினில் அச்சடிக்கத்தக்கவராயின் விரும்பத்தக்கது நேரில் வரவும். சந்திரா அச்சகம், காங்கேசன்துறை. 3695

பயிற்சி

நாடகம், சங்கீதம், மிருதங்கம், வயலின் ஆகியவைகளில் பயிற்சிபெற விரும்புகிறவர்கள் 30-9-79ந் தேதிக்கு முன் தொடர்புகொள்க-கலைக் கோயில் அரைகூவல் நாட்டியாலயம், பொற்பதிவீதி, கொக்குவில். 3704

விற்பனைக்கு

பம்பாய் வெங்காயம் நடுவதற்காய் விற்பனைக்கு உண்டு. விருப்பியோர் அந்த பார்வையிடலாம். வீரசிங்கம், சிவன்வீதி, [illegible] மேற்கு, வட்டுக்கோட்டை. 3686

பருத்தித்துறை நகரசபை

கேள்வி விளம்பரம்

சந்தை உள் கடைகள்
இல. 47, 56

மேற்குறிப்பிட்ட கடைகளை வாடகைக்குப் பெற விருப்பமுள்ளோர்களிடமிருந்து 1979-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12-ந் திகதி முற்பகல் 10-00 மணி வரையும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

பிணைப்பணம் ரூபா 150/-
பத்திரப்பணம் ரூபா 10/-

செலுத்தி 10-10-79 திகதி நண்பகல் 12-00 மணி வரை பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். பத்திரப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.

மேலதிக விபரங்களை ஒவ்வொரு வேலை நாளிலும் அறிந்து கொள்ளலாம்.

ம. வேலும்மயிலும்,
தலைவர்,
நகரசபை,
பருத்தித்துறை.

நகரசபை அலுவலகம்,
பருத்தித்துறை
21-9-79 3698

அறிவித்தல்

மானிப்பாய் அருணோதய மன்ற 29-8-79ல் வெளியிட்ட 15-வது ஆண்டு நிறைவு விழா சிறப்பு மலரின் 17-வது பக்கத்தில் பிரசுரமான "கனகலிங்கம் கோட்டக் [illegible] சுருட்டு" விளம்பரத்தில் உரிமையாளர் பொ. கனகரட்னம் என்றவாறு பிரசுரமாகியுள்ளது. தவறுக்கு வருந்துகின்றோம்.

அருணோதய மன்ற நிர்வாகிகள்.
3690

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

முத்துஐயன்கட்டு ப. நோ. கூ சங்கம்

பதவி வெற்றிடம்

கீழ்காணும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் "தலைவர், முத்துஐயன்கட்டு ப நோ கூ சங்கம், ஒட்டுசுட்டான்" என்ற விலாசத்திற்கு 3-10-79 நண்பகல் 12-00 மணிக்குமுன் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கோரிய உறையின் இடதுபக்க மேல் மூலையில் பதவியின் பெயர் குறிப்பிடப்படவேண்டும்.

பதவிகளுக்குரிய தகைமை, சம்பளம் முதலிய விபரங்களையும் மேலதிக அறிவுறுத்துரைகளையும் 12-5-72 திகதி கொண்ட 15009/12 A இலக்க முள்ள இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் இணைப்பு V (I) (II) என்பனவற்றில் பார்க்கவும்.

பதவிகள்

I. பொது முகாமையாளர் தரம் III
II. சிக்கனப் பண்டசாலை முகாமையாளர் தரம் III

த. மகாலிங்கம்,
தலைவர்,
முத்துஐயன்கட்டு
ப. நோ. கூ சங்கம்,
25-9-79.

3692

இன்று

(யாழ்ப்பாணம்

யாழ் மேல் நீதிமன்றங்கட்டிடத்தில் யாழ் மேல் நீதிமன்ற பதிவாளர் திரு பொ சத்தியசீலன் தலைமையில் இன்று நண்பகல் கலைமகள் விழா நடைபெறும். சட்டத்தரணி சிவசுந்தரத்தினம் ஆன்மீகவுரை வழங்குவார். கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும். இவ்விழா சட்டத்தரணிகளாலும், காரியப்பதிவகம் பாதுகாவலர் அலுவலகம், யாழ் நீதவான் நீதிமன்றம், யாழ் மாவட்ட நீதிமன்றம், யாழ் மேல் நீதிமன்றம் ஆகியவற்றினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (உ)

பொலிஸ் அதிபர் கூடடும் மாநாடு

நாளை நடைபெறுகிறது

(யாழ்ப்பாணம்)

பொலிசாருக்கும் பொதுமக்களுக்குமிடையில் நல்லுறவை வளர்க்கும் பொருட்டு யாழ் பொலிஸ் அதிபர் திரு. கிங்ஸ்லி விக்கிரமசூரியா நாளை சனிக்கிழமை மாநாடொன்றை கூட்டவுள்ளார்.

பொலிஸ் நிலைய மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இம் மாநாட்டிற்கு பல்வேறுதுறைகளையும் சேர்ந்த பிரமுகர்கள் அழைக்கப்பட்டுள்ளார்கள். (உ)

உ

சிவமயம்

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளுக்கு
சமர்ப்பணம்

வெள்ளிவிழா

நயினாதீவு டாக்டர் தியாகர் திருநாவுக்கரசு L L B Cey) சட்டத்தரணி (இறுதிப் பரீட்சை சித்தி)

(தர்மகர்த்தா ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம் நயினாதீவு, தலைவர் திருப்பணிச்சபை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம், வைத்திய பொறுப்பதிகாரி அரசினர் வைத்தியசாலை கல்லுவ, கெக்கிராவ)

பாரியார் பாக்கியம் திருநாவுக்கரசுவும்

தங்கள் 25-வது திருமண நிறைவுவிழாவின் நிமித்தம் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளுக்கு சங்காபிஷேகம் 28-9-79 வெள்ளிக்கிழமை காலை சிவாகம ஞான பானு பிரதிஷ்டாபூஷணம் நயினை சுவாமிஞான பரமேஸ்வரக்குருக்கள் நயினை கபிலகீர்வர மகேஸ்வரக் குருக்கள், நயினை கைலாசநாத வாமதேவக் குருக்கள் நடாத்தி வைப்பார்கள். அவ்வமயம் அடியேனை அடியார்கள் பாங்கு பற்றி சகல செல்வமும் பெற்று வாழ வேண்டுகிறோம்.

டாக்டர் தியாகர் திருநாவுக்கரசு
L L B (Cey),
பாரியாரும் பிள்ளைகளும்.

"தியாகர்பதி"
நயினாதீவு,
27-8-79 3689

சர்வதேசக் குழந்தைகள் ஆண்டை ஒட்டி யாழ். ரோட்டறிக் கழகம் அளிக்கும்

சுகாதாரக் கல்வி - பாடசாலைகளுக்கான

பரிசுப்போட்டி

பின்வரும் கேள்விகளுக்குச் சரியான விடைகளின்கீழ் கோடிடவும்.

(1) உலகத்தில் கண்மையில் முற்றாக அகற்றப்பட்ட தொற்றுநோய் எது?
அம்மை-கொப்பளிப்பான் - கிள்ளமுத்து - மலேரியா.

(2) முக்கூட்டுத் தடுப்பு ஊசிமூலம் குழந்தைகளுக்கு வராது தடுக்கக்கூடிய நோய்கள் எவை?
தொண்டைக்கரப்பன்-இளம்பிள்ளை வாதம்-காசநோய் ஏற்பு - எலும்புருக்கி

(3) முதல் ஆறுமாதங்களுக்குச் சிசுக்களுக்கு ஏற்ற சிறந்த பால் எது?
பசும்பால் - தாய்ப்பால் - சோயாக்கலவைப்பால்

(4) மிருகங்களில் இருந்து மனிதருக்குத் தொற்றுக் நோய்கள் எவை?
அம்மை - நெருப்புக் காய்ச்சல் - கொக்கு நோய்

(5) நுளம்பினால் தொற்றப்படும் நோய்கள் எவை?
டெங்குக்காய்ச்சல் - ஏற்பு - காசநோய் - யானைக் கால்நோய் - மலேரியா

(6) சந்தி வழியாகவரும் நோய்கள் எவ்வாறு பெற்றோரிடமிருந்து குழந்தைகளை அடைகிறது?
பெற்றோரிடமிருந்து தொற்றுக்மூலம் - சந்தித் சுவடுகள் மூலம்.

(7) இலங்கையரின் உணவுவகைகளில் எந்தச்சத்துக் குறைவாகக் காணப்படுகிறது?
கொழுப்புச் சத்து— மாச்சத்து புரதச்சத்து

(8) உயிர்ச்சத்து 'ஏ' கூடுதலாக உள்ள பொருள் எது?
வல்லாரை - சோயா அவரை - இறைச்சி-பால்.

(9) மிதப்புள்ள பற்களுக்கு 'கிளிப்'போட்டு அழகு செய்ய உகந்த வயது எது?
11 - 13 வரை; 14 - 16 வரை; 18 - 20 வரை.

(10) ஆரோக்கியமான பற்களுக்குத் தேவையான வைட்டமின் சத்துக்கள் எவை?
'ஏ'—'பி'— 'சி'—'டி'—'ஈ'

பகுதி II

பின்வரும் கேள்விகளுக்கு "ஆம்" அல்லது "இல்லை" என்று விடையளிக்கவும்.

(1) [illegible] புரதச்சத்து சிலவேளை ( )

(2) ஏழைகள் தங்கள் புரதச்சத்தை அரிசியில் இருந்து பெறுகிறார்கள் ( )

(3) இரத்ததானம் செய்வதால் ஒருவரின் உடலுக்குக் கெடுதல் ஏற்படுமா? ( )

(4) தொழிற்சாலை முற்றாக உடனே ஏற்புவலி தடுப்பூசி போடுவித்தல் வேண்டுமா? ( )

(5) கர்ப்பிணிகள் ஏற்புத் தடுப்பூசி போடுதல் கூடாதா? ( )

(6) குழந்தைகளுக்கு ஏற்படும் சிரங்கை மாற்றாது விட்டால் இருதயம் முதலிய உறுப்புகளைப் பாதிக்குமா? ( )

(7) வயிற்றோட்டத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைக்குக் கடுதலாகத் தண்ணீர்ப் பதார்த்தங்கள் கொடுப்பது தவறு? ( )

(8) "பலேரியா" என்று கூறப்படும் பல் இளமை நோயை ஆரம்பத்தில் பல் வைத்தியத்தினால் மாற்றமுடியுமா? ( )

(9) பற்சூத்தை ஒரு பல்லினிலும் மற்றைய பற்களுக்குத் தொற்றும் தன்மையுடையதா? ( )

(10) ஒவ்வொரு சாப்பாட்டிற்கும் பின்பு பற்களைத் துலக்குதலே சிறந்தபற்பாதுகாப்பு ஆகுமா? ( )

பகுதி III

பின்வரும் கேள்விகளுக்குத் தகுந்தவிடை தருக.

(1) குழந்தை பிறந்தவுடன் ஏன் அழுகிறது?

(2) தொற்றுநோய் பரவும் வழிகளை நிரைப்படுத்திக் கூறுக? ஒவ்வொன்றுக்கும் இரு உதாரணங்களைக் கூறுக?

(3) பின்வரும் தொற்று நோய்களுக்கு நீங்கள் எடுக்கவேண்டிய பாதுகாப்பு என்ன?
(i) மலேரியா
(ii) காசநோய்
(iii) வயிற்றோட்டம்

(4) பின்வரு ஆத்தான சந்தர்ப்பங்களில் நீங்கள் செய்ய கடிய முதலுதவி என்ன?
(i) வலிப்பு நோயால் அவஸ்தைப்படும் ஒருவருக்கு-
(ii) விடப்பாம்பினால் கடியுண்ட ஒருவருக்கு-
(iii) நீரில் மூழ்கித் தத்தளிப்பவருக்கு-

(5) வயிற்றில் வளரும் பூச்சிகளில் முக்கியமான மூன்றைக் கூறுக? அவற்றைத் தடுப்பதற்குச் சிறந்த வழிகள் எவை?

(6) உங்கள் வீட்டில் இருக்கும் வைக்குழந்தைக்குப் பால் பருக்கும்போழுது 'பிரக்கடித்து' மூச்சுத் திணறினால் என்ன செய்வீர்கள்?

(7) காதுக்குள் சிறு பூச்சிசென்று இடைஞ்சல் செய்தால் உடனடியாக நீங்கள் என்ன செய்வீர்கள்?

(8) வெண்மையான - ஆரோக்கியமான பற்களைப் பெறுவதற்கு குழந்தைகள் எடுக்கவேண்டிய பாதுகாப்பு எவை?

(9) பிள்ளைகள் தொடர்ந்து விரல் சூப்புவதை சுலபமாகத் தடுப்பதற்கு பள்ளிவத்தியத்தில் இடம் உண்டா?

(10) உள்ளத்தைத் தூய்மையாக வைத்திருக்க மாணவர் கைக்கொள்ளவேண்டியது யாது?

(6ம் பக்கம் பார்க்க)

இங்கேயும் பஸ்கள் ஓடுகின்றன

யாழ்ப்பாணத்திலும் பஸ் வண்டிகள் ஓடுகின்றன என்று பல ஆண்டுகளுக்கு முன்னதாக ஒருவர் முடிவுரைத்ததை பார்க்கும் பொழுது சிரிப்பும் இன்றும் போக்குவரத்து சரியாக இயங்வில்லை என்பது தெளிவாகின்றது. அப்பொழுது தனியார் துறை பஸ்கம்பெனிகள் மூலம் பஸ் சேவைகள் நடாத்தப்பட்டன. 1959-ம் ஆண்டிற்குப் பின்னர் பஸ் தேசிய மயமாக்கப்பட்ட பின்னரும் பஸ் சேவையில் குறைபாடுகள் இருந்தாகச் செய்கின்றன. 1959-ம் ஆண்டிற்கு முன்னர் போக்குவரத்து திணைக்களம் பஸ் சேவையை பராமரித்த காலத்தில் உரிய நேர அட்டவணையின் பிரகாரம் பஸ் தனியார் கம்பனிகளிலும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிட்டால் வழக்கு தாக்கல் செய்வதற்கு சட்டம் இடமளித்திருந்தது. இதன்காரணமாக இக் கம்பெனிகள் சரியில் பஸ் கம்பெனிகளிலிருந்து பஸ்வண்டிகளை வாடகைக்கமர்த்தி உரிய அட்டவணைப் பிரகாரம் பஸ் சேவையை நடாத்தி வந்தனர். அரசாங்கம் தனி முதலாளியான பின்னர் அவ்வப் ஆண்டுக் காலத்திற்குரிய லைசென்ஸ்தாரனும் இல்லாமலே பஸ்வண்டிகள் ஓடுகின்றன. இதனை பிரவாணிகள் கவனிக்காமலிக்கிலை. அரசாங்கம் பொறுப்பேற்றும் அரசாங்கத்தின் மந்திரி மார்கள் பஸ் சேவை திருத்தியமைக்கப்படும் என கூறுகின்றனர். ஆனால் செயற்பாடோ[illegible]; உணவு முத்திரைதான் இல்லாவிட்டாலும் பொது மக்கள் தாங்கள் செல்ல வேண்டிய இடத்திற்கு உரிய நேரத்தில் செல்ல விருப்புகின்றார்கள் இதனை பூர்த்திசெய்ய வேண்டியது அரசின் தலையாய கடமை. உரிய நேரத்தில் கடமைக்கு பணியாளர்கள் செல்வதற்கு அரசு உதவ வேண்டும். இதனை அரசு செய்யத் தவறுமாறால் ஒழுங்கீனம் ஏற்பட இடமுண்டு. ஒருநாள் பிந்தி செல்பவர் மறுநாளும் பிந்திச் சென்று பின்னர் அதனை வழக்கமாக்கி கொள்வதற்கு அரசே வழி வகுத்ததாக முடியும். போதிய பஸ் வண்டிகள் இல்லாததற்காரணமாகத்தான் நேர அட்டவணையை செயற்படுத்த முடியவில்லையென காரணம் காட்டப்படுகின்றது. இதனை நியாயமாக ஏற்றுக் கொண்டாலும் எத்தனைகாலம் இப்படி கடத்தலாம். பல ஆயிரக்கணக்கான மக்கள் விலைத்தக்க மாற்றங்களையும் செய்து வருவதாக கூறும் அரசாங்கம் உடனடியாக இப்போக்குவரத்து பிரச்னையை தீர்க்கவேண்டிய வழிவகைகளை கையாள் வேண்டும். பிராந்திய அடிப்படையில் கொண்டிருக்கும் இ.போ.ச. சபைகள் இவற்றை முறையை இன்றும் பின்பற்றுவதாகவே தெரிகின்றது. நேரடியாக உதிரிப்பாகங்கள் வாங்குவதற்காக அதிகாரம் இப்பிராந்திய சபைகளுக்கு வழங்கப்பட்ட பின்னரும் இந்த முறையில் குறிப்பிடத்தக்க மாற்றம் நிகழ்ந்ததாக தெரியவில்லை. பிழையாக செல்லும் பஸ்வண்டிகள் பூரணமான முறையில் திருத்தி உரிய பணியாளர்களிடம் ஒப்படைக்கப்படாததால் பணியாளர்கள் அவ்வண்டிகளை ஓட்டத் தயங்குவது இயற்கையே. சில சமயங்களில் சில பஸ்வண்டிகள் (கிளிநொச்சி ஏழுகளுடன்) ஒருவேளை சாரதிகளாக்தான் ஓடக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. அவர்கள் அன்று கடமைக்கு செல்லாவிட்டால் அன்றைய லீலிக்கிறார் அவ்வண்டிகளை வேறு ஒருவரும் பொறுப்பேற்க முடியாத சந்தர்ப்பங்களும் நிலவுகின்றன.

இவற்றையெல்லாம் நீக்குவதற்கும் பொதுமக்களுக்கு நல்ல முறையில் சேவையை வழங்குவதற்கும் போக்குவரத்து மந்திரி அவர்கள் கவனிக்கவேண்டிய நடவடிக்கை எடுத்து வருகின்றார் ஆனால் அவரது நடவடிக்கைகளை தொடர்ந்தும் உயர் உத்தியோகத்தர்கள் கவனிக்க வேண்டும். பராளுமன்றத்தில் பிரதமர் கூறியது போல உயர் அதிகாரிகள் சோம்பேறிகளை முடிவிட்டு வாழாவிருக்கக்கூடாது. ஞாயிற்றுக் கிழமை வாகனத் தடைச்சட்டம் வந்தபின்னர் இ.போ.ச. உயர் அதிகாரி ஒருவர் தனது மேலதிகாரியிடமிருந்து ஒரு ஞாயிற்றுக் கிழமை பஸ்சேவை சீராக இயங்குகின்றதா என்பதை அவதானிக்க காரில் செல்ல அனுமதி கோரினாராம். அதற்கு பஸ்வண்டியில் சென்று பார்க்கலாம் என 'பவி' என்று வந்ததாம் பதில் எனவேதிதுபோன்ற சம்பவங்கள் நாங்கள் எவ்வளவு தூரத்திற்கு நாம் ஒப்பற்று உள்ள வர்களாயிருக்கிறோம் என்பதை காட்டுகின்றது; இவற்றை திருத்துவதற்கு சட்டங்கள் உதவாது உணர்வுகள் மாற்றி அமைக்கப்பட்டால்தான் இ.போ.சவின் சேவையில் மாற்றங்கள் நிகழும். பொதுமக்களுடன் தொடர்புள்ள சபைகள் திணைக்களங்கள் இப்பகுதிகளுக்கு தகுதியும், திறமையும், பொறுப்பும், கடமை உணர்வும் உள்ளவர்களை தெரிந்து நியமிக்கவேண்டும். இதற்கு அரசியல் குறுக்கே நிற்கமாட்டாதென பிரதமர் அவர்கள் தெரிவித்த கருத்து இத்துறையில் பெரிதும் வரவேற்கத்தக்கதொன்றாகும்.

இலங்கை ஜனத்தொகையில் நாலிலொரு பகுதியினர் எப்பொழுதும் இ.போ.ச. பஸ் வண்டிகளிலேயே பிரயாணம் செய்து கொண்டிருப்பதாக தெரியவந்துள்ளது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் 4500 பஸ் வண்டிகள் இருந்ததாகவும் தற்பொழுது 6600 வண்டிகளாக உயர்ந்துள்ளதாகவும் அமையில் இடம்பெற்ற இ. போ. ச. கூட்டமொன்றில் கூறப்பட்டது.

தற்போதைய வருமானம் நாளொன்றிற்கு 30 லட்சம் எனவும் கூறப்படுகிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த நிலையிலும் பார்க்க இருமடங்காகக் கூடியுள்ளது. இருந்தும் பஸ் சேவையில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர். இந்த வருமானங்களுக்கு ஏற்றவாறு பணியாளர் தொகையும் 60,000 எனக் கணிக்கப்பட்டுள்ளது. இதேபோல பஸ்வண்டிகளும் கூட வேண்டும். பழைய இருப்புத் துண்டுகளையும் பிறவற்றையும் இ. போ. ச. விற்று பணம் பெறுவதிலிருந்து 40 பஸ் வண்டிகளை வாங்குவதற்கு ஒழுங்கு செய்துள்ளதாம். இது ஒரு வரவேற்கத்தக்க நடவடிக்கை. இதேபோல பிற இ. போ. ச. நிலையங்களிலுள்ள இருப்புகளைக் கொடுத்தாகுதல் பஸ் வண்டியின் எண்ணிக்கையைக் கூட்டிக் கொள்ளலாம். இதனை எல்லாப்பகுதி பிராந்திய சபைகளுக்கும் கொள்ளுதல் இப்பகுதி மக்களுக்கு நன்மையளிக்கும்.

எஸ். கே. ரி.

சகிராணை

மக்கள் கருத்து

யாழ். மாநகரசபை கூட்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண மாநகர சபை மாதாந்தக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை முதல்வர் திரு இராஜா விசுவநாதன் தலைமையில் நடைபெறவிருக்கிறது. (உ)

இன்று சரஸ்வதி பூஜாரம்பம்

பராசக்தியைப் பரவுவோம்

— சிவஶ்ரீ சாம்பசிவசர்மா —

தனத்தரும் கல்வியரும் ஒரு நாளுக் தளரவறியா மனத்தரும் தெய்வ வடிவுத் தரும் நெஞ்சிலிவஞ்சமிலா இனத்தரும் நல்லை எல்லாத் தரும் ஈன்பர் என்பவர்க்கே கனத்தரும் பூங்குழலாள் அபிராமிகடைக்கணே!

(அபிராமி அந்தாதி)

நவராத்திரி என்பது காரிகாலமாகிய புரட்டாதி மாதத்தில் வளர்பிறைப்பிரதமை முதல் நவமியீறாக ஒன்பதுநாட்களும் பரிபூரணமாய் நித்தியமாய் குர்குணமாய் உள்ள சிவசக்தியை - பராசக்தியை - சகுணப் பிரமமாகக்கொண்டு பலவித சக்தி வடிவினளாய்க் (துர்கா - லக்ஷ்மி - சரஸ்வதி) கண்டு பூஜிப்பதற்கு மிகச் சிறந்த நாட்களாகும்.

வசந்தருது, சரற்றுது என்கின்ற இரண்டு ருதுக்களும், யமதர்மராஜனுடைய இரண்டு கோரப் பற்களுக்குச் சமமாக உள்ளவை.

இவைகளில் வசந்தருதுவில் வெப்பம் மிகுதியாகி அமைம், அக்கி, சின்னம்மை போன்ற நோய்களும், சரற்றுதுவில் தட்பம் மிகுதியாகி கழிச்சல்-படுவன் போன்ற நோய்களும் தோன்றி மக்களைத் துன்புறுத்தும். இந்நோய்கள் மக்களைப் பீடிக்காவண்ணம் இந்த இரு ருதுக்களிலும் உலகமாதாவாகிய ஆதிபராசக்தியைக் குறித்து ஒன்பது தினங்களும் விரதம் அனுஷ்டித்து பூஜிப்பதற்கு உகந்த இராக்களாய் அமைந்தன. மேலும் அந்தியகாலை விசேஷமாகப் பூஜிப்பதற்கு சோமவாரம், மங்கள வாரம், சுக்கிரவாரம், சப்தமி, அஷ்டமி, நவமி, தேய்பிறைச் சதுர்த்தசி, பிரதோசம் முதலியன பொருந்தும்.

சிவசக்தியானவள் சிவத்தை வேஷியான தக்ஷிணை வேண்டியை அஷ்டமியன்றாளாளியாக உருவெடுத்து அழிக்கமையால் அந்நாள் காளிதேவி வழிபாட்டிற்குச் சிறந்த நாளாயிற்று மேலும் இந்தேவியை இராமபிரான் வழிபட்டு தன் தர்மபத்தினி ஜானகியை மீட்டார். இராவணனை ஜயித்ததற்காகப் பத்துநாள் பூஜிக்க அஷ்டமியில் காட்சியளித்ததாக தேவி மஹாத்மியத்திலே கூறப்பட்டுள்ளது.

சிவனுக்குரிய இராத்திரி ஒன்று (சிவராத்திரி); சக்திக்குரிய இராத்திரி ஒன்பது (நவராத்திரி).

ஒன்பது என்ற எண் மிக உயர்ந்தது. எல்லோராலும் வணங்கக் கூடியது. சர்வசித்தி களையுமளிக்கவல்லதும் மக்களால் செய்யப்படும் நல்ல தீய காரியங்களுக்குச் சாக்ஷியாக உள்ளதும், மக்களின் கல சக்கரங்களைச்சுழற்றும் நாயகனாயிருப்பதும், உலகிற்கரசனாயிருப்பதும், இரத்தினங்களாயிருப்பதும், காமிகாமம் சொன்ன நாதுக்களிலிருப்பதும், யோக சாஸ்திரக் கருத்துவரங்களும், தேவியின் கிலக்பு வீரர்களாய் அமைந்ததும், உயிர்கள் உய்ய பேதங்களாயிருப்பதும் ஒன்பது.

ஒன்பது தனக்கு உவமை இல்லாதது. ஒன்றிற்று நிற்பது. மனதை ஒன்றிற்று நிற்குஞ் சக்திவாய்ந்த எண். இதுவே நமக்குக் கண். இறைவன் ஒருவனே ஒன்பது பேதமாகிறபடியால். கிலக்ஞான அதிஷ்டாதா ஆனபொழுது பிந்து அதிஷ்டாத்ரயான சக்தியாய், சதாசிவருக்கு மனோன்மணியாய், மஹேஸ்வரருக்கு மஹேஸ்வரியாய் உருத்திரருக்கு உமையாய், விஷ்ணுவுக்கு லக்ஷ்மியாய், பிரம்மாவுக்கு சரஸ்வதியாய் விளங்குமிச்சக்தி வேதங்களெல்லாம், பராசக்தி ஒன்றுள் ஆவதாம். வெசக்தி வொன்றே அநேக சக்தியாய்த் தோன்றினாள் என்று சுருதியிலே

"ஏகைவாநேக தாகியாதி வெசக்தி ரூபாதித" (சமஸ்கிருதம்) என்று கூறப்பட்டிருக்கிறது.

ஆலயங்களில் மூன்று சக்திகள் பூஜிக்கப்படுகின்றன. யோக சக்தி, விராசக்தி, போகசக்தி இவை மூன்றும் முறையே துர்கா, லக்ஷ்மி, சரஸ்வதி என்று பூஜிக்கப்படுகின்றன. இந்த சக்திவழிபாடு யந்திர வடிவாகவும், கும்பவடிவாகவும், பிம்பவடிவாகவும் மூன்று நிலைகளில் வைத்து பூஜிக்கிறார்கள். முதல் மூன்று நாட்களும் துர்கா பூஜை, நடுமூன்று நாட்களும், லக்ஷ்மிபூஜை, கடைசிமூன்றுநாட்களும் சரஸ்வதிபூஜை பத்தாம்நாள் விஜயதசமி அன்று மஹிதாசூரனை அழித்த "மஹிடிரசுரமர்த்தனி" யாக ஆவாகனம் செய்து வழிபட்டு ஆயுதபூஜை செய்வார்கள். ஆலயங்களில் மானம்பூ உற்சவமும் நடைபெறும். ஆகவே இந்நன்நாட்களில் உலகமாதாவாகிய ஆதிபராசக்தியை வழிபட்டு நாமும் அருள்பெறுவோமாக.

கண்ணியமற்றநடத்தைக்கு மன்னிப்பே கிடையாது!

ஆஸ்பத்திரி உத்தியோகத்தர்களுக்கு சுகாதார அமைச்சு கடும் எச்சரிக்கை

(கொழும்பு)

பொதுமக்களுடன் மிகவும் கண்ணியமாக, உயர்ந்தசேவைமனப்பான்மையுடன் நடந்துகொள்ளுமாறு, ஆஸ்பத்திரி உத்தியோகத்தர்களை சுகாதார அமைச்சு பணித்துள்ளது.

ஆஸ்பத்திரி தலைமைப்பீடங்களுக்கு சுகாதார அமைச்சு விடுத்துள்ள சுற்றறிக்கையில்; பொதுமக்களுடன் கண்ணியமற்றமுறையில், ஒரளவு கொடூரமாக நடந்துகொள்ளும் ஆஸ்பத்திரி உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மீது இனிமேல் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், இவர்கள் தெரிவிக்கும் எந்தவிதமான 'சாக்குப் போக்கு'களும் எக்காரணங் கொண்டும் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது என்றும், இவர்கள் மன்னிக்கவும் முடியாது என்றும் எச்சரித்துள்ளது

ஆஸ்பத்திரி உத்தியோகத்தர்கள் சில சந்தர்ப்பங்களில், கண்ணியமற்றமுறையில் நடந்துகொள்வதற்கு ஆஸ்பத்திரியில்சில பகுதிகளில் காணப்படும் நோயாளர் அதிகரிப்பே காரணம் என்பதை எச்சந்தர்ப்பத்திலும் ஏற்றுக்கொள்ளமுடியாது என்று கூறும் சுகாதார அமைச்சு;

"அரசாங்க ஆஸ்பத்திரிகளில் நோயாளர்கள் சில சந்தர்ப்பங்களில் எவ்விதமாக 'கவனிக்க'ப்படுகின்றனர் என்பது குறித்து அமைச்சுக்கு கிடைத்த ஏராளமான புகார்களைத் தொடர்ந்தே புதிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது" என்று தெரிவித்துள்ளது.

அரசாங்க ஆஸ்பத்திரிகளில் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்கும் பொதுமக்களுக்குமிடையே அண்மையில் இடம்பெற்ற வாய்த்தர்க்கம், பலமுறுத்தல், தாக்குதல் முயற்சிகள் போன்ற சம்பவங்கள் சுகாதார திணைக்களத்துக்கு மட்டுமின்றி அரசாங்கத்துக்குங்கூட ஒரு அவப்பெயரை உண்டாக்கலாம் என்று சுகாதார அமைச்சர் திரு காமினி ஜயசூரியா கவலைப்படுவதாக கூறும் சுகாதார அமைச்சு வட்டாரங்கள்; பொதுமக்களுடன் மிகவும் கண்ணியமாகவும், சேவை மனப்பான்மையுடன் மிகவும் உயர்வாக அரசாங்க ஆஸ்பத்திரி உத்தியோகத்தர்கள் நடந்து கொள்ளுகின்றனரா என்பதைத் தீவிரமாக கண்காணிக்குமாறு ஆஸ்பத்திரி தலைமைப்பீடங்களை சுகாதார அமைச்சு இப்பொழுது கேட்டுக்கொண்டிருப்பதாக தெரிவிக்கின்றன.

"கடுமையான ஒரு நோயாளியை வெறும் மருந்துமூலமாக மட்டும் சுகப்படுத்திவிடமுடியாது; அந்த நோயாளியுடன் இதமாகப்பேசி, உயர்வாக நடந்துகொள்வதன் மூலம் விரைவாக சுகமாக்கமுடியும் என்பதை தாதிமார்களும், வைத்திய அதிகாரிகளும் மனதிற்கொள்ளவேண்டும்" என்றும் சுகாதார அமைச்சு தனது சுற்றறிக்கையில் கூறியுள்ளது.

இன்றைய பலன்

புரட்டாதிமாதம் 12-ம் திகதி
வெள்ளிக்கிழமை
[28-9-1979]

மேடம்: இன்பத்திற்கு அணையில் இதயத்தைப் பறிகொடுப்பீர்கள். பிரமச்சாரிகளின் வாழ்க்கையில் காதல் கனி தரக்கூடும். குடும்பஸ்தர்களுக்கும் சுவையான சம்பவங்கள் உண்டு. கலர்ச்சிகரமான தினம்.

இடபம்: சிந்தனையில் மாற்றம் ஏற்படும். செய்தொழிலால் நஷ்டம் ஏற்படலாம். புதிய முதலீடுகளை இன்று தவிர்த்தல் நன்று. சிலருக்கு தூரதன ரோகம் தென்படலாம். சுகாதாரம் வேண்டும்

மிதுனம்: சந்திப்பின் மூலம் பயனுள்ள தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளுவீர்கள். காத்திருந்த கனவுகளுக்கு களிப்பூட்டும் விருந்தொன்று கிடைக்கும். மகிழ்ச்சிகரமான தினம்.

கடகம்: தாமத குணத்தினால் முயற்சி தவறுகள் நடக்க

[4-ம் பக்கம் பார்க்க]

பாகிஸ்தானில் திட்டமிட்டபடி நவ. 17-ல் தேர்தல் நடத்துவதுசிரமம்

தேசிய நலன்கருதி ஒத்திவைப்பு அவசியமாகிறது என்கிறார் ஜனாதிபதி

இஸ்லாமாபாத், செப். 27 பாகிஸ்தான் பொதுத்தேர்தல் தேசிய நலன் கருதி ஒத்திவைக்கப்படலாம் என ஜனாதிபதி ஜெனரல் ஜியாவுல் ஹக் தெரிவித்துள்ளார்.

பொதுத்தேர்தலில் 35 கட்சிகள் போட்டியிட முன்வந்துள்ளன. இதனால் எந்த ஒரு கட்சியோ ஆதரவுக் கட்சிகளின் கூட்டணியோ அரசு அமைக்க முடியாத நிலையில் உள்ளன. இது தேசியநலனைப் பாதிக்கும் என்பதை மறுக்கமுடியாது. எனவே தேர்தல் ஒத்திவைக்க வேண்டி ஏற்படுமென்றும் அவர் கூறினார்.

பாகிஸ்தானில் நடைபெற்ற கட்டமொன்றில் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:

எதிர்வரும் நவம்பர் 17ம் தேதி பொதுத்தேர்தல் நடத்துவது என்று ஏற்கனவே வாக்குறுதியளித்தாலும் தேசிய நலனுக்கு தேர்தல் நடத்துவது குந்தகம் விளைவிக்கும் என்று கருதப்படும் பட்சத்தில் எனதுவாக்குறுதியை விடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம்.

இன்றைய அரசியல் நிலையில் தேர்தல் நடத்துவதைவிட தேசிய ஒருமைப்பாட்டைப் பேணுவதுதான் மிக முக்கியமாகும். [இ]

கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

இலங்கை சுருட்டுத்தொழிலாளர் சங்கக் கருத்தரங்கு நாளை மாலை தரவடியிலுள்ள சங்க மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இக்கருத்தரங்கில் சுருட்டுத் தொழில் ஒரு கூட்டுத்தாபனத்தின்கீழ் கொண்டுவருவதா அல்லது சிறு கைத்தொழிலின்கீழ் கொண்டுவருவதா என்பதுபற்றி ஆராயப்படவிருக்கிறது. [க-கி]

கொழும்புத்துறை செபமாலைமாதா உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ் கொழும்புத்துறை புனித செபமாலை மாதா திருநாள் இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. அடுத்தவாரம் 7-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை உற்சவம் முடிவடையும். தினமும் மாலை 6-30 மணிக்கு நவநாள் வழிபாடும், 6-ம் திகதி சனிக்கிழமை மாலை 6-30 மணிக்கு நற்கருணைப் பவனியும் நடைபெறும். 7-ம் திகதி 7 மணிக்கு திருவிழாப் பாடற்பூசை யாழ். ஆயர் இராயப்பு ஜோசப் தலைமையில் நிறைவேற்றப்படும். மாலை 5 மணிக்கு மாதாவின் திருச்சொரூப சுற்றுப் பிரகாரத்துடன் திருவிழா முடிவடையும். [க]

இன்றைய பலன்

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

லாம். வேண்டாத விவாதங்களால் விரும்பேயர் கேட்க நேரிடும். கலைச் செய்திக்கும் இடமுண்டு. நிதியில் நெருக்கடியும் தோன்றும்.

சிங்கம்: தெய்வநம்பிக்கை மேலோங்கி நிற்கும். கிழக்கு திசை ஆக்கமான விடயங்களில் அதிக ஆர்வம் ஏற்படலாம். பொதுப் பணிகளில் ஈடுபடுவதன் மூலம் பொதுமக்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

கன்னி: வியாபாரத்துறையில் ஈடுபடுபவர்கள் இன்று அதிக முதலீட்டைத் தவிர்த்துக்கொள்ளவும், எதிர்பார்த்த விடயத்தில் நஷ்டம் ஏற்படலாம். நண்பர்களாலும் தொல்லைகள் அதிகரிக்கும்.

துலாம்: உழைப்பினால் முன்னேற்றம் ஏற்படும். வியாபாரத் துறையில் விருத்தியுண்டு. தாய்வழிப் பொருள் வரவுக்கும் இடமுண்டு. உயர்கல்வியில் ஈடுபடுபவர்களுக்கு உற்சாகமான

விருச்சிகம்: சமயோசித புத்தி உங்களுக்குத் தாராள மான சிந்தனையைத் தேடித் தரும். மக்கள் மூலம் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம் பெறும். உடலத்தில் உவகை தங்கும்.

தனு: குடும்பத்தில் சுமுக குறைவுகள் தென்படலாம். அதிக அலைச்சலின் மூலம் வெற்றிகள் உருவாகும். முன்னேற்றப் பாதையில் முட்டுக்கட்டை போடுவதற்கு முயற்சிகள் நடைபெறும். உணர்ச்சிவசப்படாதிருத்தல் வேண்டும்.

மகரம்: தனத்துடன் வாழ்வு இன்று தவறாது கிடைக்கும். இலக்கியத்துக்கு அதிர்ஷ்ட இலாபங்களுக்கும் இடமுண்டு. நீண்டநாள் கடன் நிவர்த்தியாகும். வியப்பூட்டும் செய்தியும் கிடைக்கும்.

கும்பம்: மனக் கவலைகளுக்கு இடம் அளிக்கும். கடமையில் தடை ஏற்படும். மேலதிகாரிகளைப் பகைத்துக் கொள்ளுவீர்கள். மதுபான விரும்பிகளைத் தவிர்த்துக் கொள்ளவும்.

மீனம்: வேண்டிய அளவிற்கு இன்று வெள்ளிப்பணம் தங்கும். மாதருழைப் பெருமைக்கு இடம் உண்டு. மனம் போல வாழ்வு நடக்கும். இன்று கல்வியில் சிறப்புக் உறவினர் கொண்டாட்டமும் கிடைக்கும்.

சோதிடக்கலைஞர்
திருமலை க. வேலுப்பிள்ளை

எம். ஜி. ஆர். கட்சிக்கு கம்யூனிஸ்ட் ஆதரவளிக்காது

சென்னை, செப். 27

ஜனதா கட்சியுடன் தேர்தல் உடன்பாடு செய்துகொண்டமையினால் அ.இ.அ.தி.மு.க.வுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட்கட்சி ஆதரவளிக்காது.

இவ்வாறு இந்திய கம்யூனிஸ்ட்கட்சி தமிழ்நாடு தலைவர் திரு. எம். கல்யாணசுந்தரம் தெரிவித்துள்ளார். [இ]

ஜனதா-எஸ் -காங்கிரஸ் கூட்டணிக்கு இந்தியகம்யூனிஸ்ட் ஆதரவு

பொதுச்செயலாளர் அறிவிப்பு

புதுடில்லி, செப். 27

எதிர்வரும் இடைத்தேர்தலில் 'ஜனதா-எஸ்'-காங்கிரஸ் கட்டணிக்கு ஆதரவளிப்பதென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தீர்மானித்துள்ளது:

கட்சிப் பொதுச்செயலாளர் திரு. ராஜேஸ்வரராவ் நேற்று புதுடில்லியில் பத்திரிகைநிருபர்களிடம் கட்சியின் இம்முடிவைத் தெரிவித்தார்.

ஜனதா கட்சியையும் இந்திரா காங்கிரஸையும் தோற்கடிக்க இடதுசாரிகளுடன் இணைந்து போராடுவதுடன் ஜனதா-எஸ்-காங்கிரஸ் கூட்டணிக்கு ஆதரவு அளிப்பதென்று கட்சி தீர்மானித்துள்ளது என்றும் திரு. ராஜேஸ்வரராவ் கூறினார். [இ]

ஜனதா - இந். காங்கிரஸ் இரகசிய ஒப்பந்தம்?

சரண்சிங் மீண்டும் உறுதியாகக் கூறுகிறார்

புதுடில்லி, செப் 27

"ஜனதாகட்சிக்கும் இந்திரா காங்கிரஸ் கட்சிக்குமிடையே இரகசிய ஒப்பந்தமொன்றுஏற்கனவே செய்யப்பட்டு இப்போது கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது."

இவ்வாறு இந்தியப் பிரதமர் திரு. சரண்சிங் மீண்டும் உறுதிபட கூறினார்.

நமது அரசு வீழ்ச்சியடையும் போது நீதிமன்றம் இந்திரா காந்தியின் காங்கிரஸ்கட்சி நடந்து கொண்டவிதம் இரு கட்சிகளுக்குமிடையேஇரகசிய ஒப்பந்தம் ஒன்று இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகிறதென்றும் கூறிய திரு. சரண்சிங், தமது அரசு வீழ்ச்சியுற்ற போதிலும் இந்திரா காங்கிரஸின் மிரட்டலுக்கு தாம் பணிய மறுத்தது சகலரும் அறிந்த உண்மையே என்றும் கூறினார். [இ]

'ஜனதா-எஸ்' கட்சியின்

'ஏர்-உழவர்' சின்னத்தை தடுத்துவைக்க கோரிக்கை

புதுடில்லி, செப் 27

ஜனதா-எஸ்கட்சிக்குவழங்கியுள்ள 'ஏர்-உழவர்' சின்னத்தை தடுத்துவைக்குமாறு ஜனதா கட்சி தேர்தல்கமிஷனுக்கு விண்ணப்பித்துள்ளது.

இந்தச்சின்னம் ஜனதா கட்சி தலைவர்களில் ஒருவரான திரு. முரளி மனோகர்ஜோஷி தெரிவித்தார்.

லோக்தள் கட்சியைஒருதேசிய கட்சியாக அங்கீகரிக்கக் கூடாது என்று ஜனதா கட்சி தேர்தல் கமிஷனுக்குவிண்ணப்பித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

ஜனதா-எஸ் கட்சிக்கு லோக்சபையில் அதன்வலுவின் அடிப்படையில் அங்கீகாரம் அளிக்கப்பட்டது ஆனால் லோக்தள் கட்சிக்கு அதே அடிப்படையில் அங்கீகாரம் அளிக்கமுடியாது என்றும் அவர் கூறினார்.

சரண்சிங் ஆதரவாளர் புதிய கட்சி அமைத்தனர்

புதுடில்லி, செப் 26

ஜனதா எஸ் கட்சியும் அதன் தோழமைக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து புதியகட்சியொன்றை அமைத்துள்ளன

இப்புதிய கட்சிக்கு லோக்தள் கட்சி என்று பெயரிடப்பட்டுள்ளது

இன்று புதுடில்லியில் ஆரம்பமான ஜனதா எஸ் கட்சியின் முதல் மாநாட்டில் இந்தப் புதிய கட்சி உருவாக்கப்பட்டது. மாநாட்டுக்கு திரு. ராஜ்நாராயண் தலைமை வகித்தார்.

எதிர்வரும் லோக்சபைத் தேர்தலில் இக்கட்சி கடைப்பிடிக்க வேண்டிய உத்திமுறைகள்பற்றி இம்மாநாட்டில் ஆராயப்படுகின்றது.

ஜனதாகட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்தால் ...

தமிழ் நாட்டில் சந்திரசேகர்

சென்னை, செப். 27 கூறியதாவது:

ஜனதாகட்சி எதிர்வரும் லோக்சபைத்தேர்தலில்வெற்றி பெற்று ஆட்சிக்குவருமானால் தூய்மையான நல்ல அரசு ஒன்றை அமைக்கும் என்று ஜனதாகட்சித் தலைவர் திரு. சந்திரசேகர் தமிழ்நாடு திருப்பத்தூரில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

ஜனதாகட்சி மீண்டும் பதவிக்கு வந்தால் வேலையில்லாதவர்களுக்கு வேலைவழங்க நடவடிக்கை எடுக்கும்; நலிவுற்றோரின் மேம்பாட்டுக்காகப் பாடுபடும்.

கடந்த ஆட்சிக் காலத்தில் ஜனதா அரசு தனது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற தம்மாலானவற்றைச் செய்தது. [இ]

4,300கோடி30 லட்சம்டாலரை

வெளிநாட்டில் அமெரிக்கா முதலீடு செய்யும்

வாஷிங்டன், செப். 27

அமெரிக்கா அடுத்தாண்டு வெளிநாடுகளில்4300கோடியே 30 லட்சம்டாலரை முதலீடு செய்ய முடிவு செய்துள்ளது

இவ்வாண்டு முதலீட்டைவிட இது 15வீதம் அதிகமான தாகும்.

எண்ணெய் துறையிலேயே அதிக பணம் முதலீடுசெய்யப்படுமென அமெரிக்க உயர்அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

1978ம் ஆண்டு வெளிநாடுகளில் செய்த முதலீட்டைவிட இந்த ஆண்டு 22 வீதம் கூடுதலாக முதலீடு செய்யப்பட்டது இம் முதலீடு இப்போதுமேலும் 15 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. [இ]

கியூபாவில் சோவியத் படைகள்:

யு. எஸ். மாற்றுநடவடிக்கை; அதிபர் கார்ட்டர் எச்சரிக்கை

நியூயோர்க், செப். 27

கியூபாவிலுள்ள சோவியத் அதிரடிப் படைகளை அப்புறப்படுத்துவதற்கு எடுக்கப்பட்டு வரும் ராஜதந்திர நடவடிக்கைகள் பலன் தராதுபோனால் தக்க மாற்று நடவடிக்கைஎடுக்கப்போவதாக அமெரிக்கஅதிபர் ஜிம்மி கார்ட்டர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நியூயோர்க்கில் கூடிய மொன்றில் அதிபர் கார்ட்டர் இக்கருத்தை வெளியிட்டார்.

ராணுவ நடவடிக்கை எதுவும் எடுப்பது பற்றி அதிபர் கார்ட்டர் ஆலோசிக்கவில்லை என்று அமெரிக்க அதிகாரிகள் கூறினார்கள்.

கியூபாவில் சோவியத் படைகள் இருப்பதாகக் கூறப்படுவதை சோவியத் அரசு முற்றாக மறுத்துவருகின்றது. சோவியத் ராணுவ நிபுணர்கள் கியூபா ராணுவத்தினருக்கு பயிற்சி அளித்துவருவதை அவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

கிழக்கு நாடுகளுக்கு முன் சோவியத் வெளிநாட்டமைச்சர் திரு. குரோமிக்கோ ஐ.நா பொதுச்சபையில் இதுபற்றி மறைமுகமாகக் குறிப்பிட்டு கியூபாவில் சோவியத்படைகள் இருப்பதாக விளம்பரம் செய்யப்பட்டு வருவதாகக் கூறியிருந்தார். [இ]

வின்ஸர் மகத்தான 5-வது வாரம்
யாழ்ப்பாணம் தினசரி 10-30, பி.ப.2-30, 6-30, 9-30
(தெல்லிப்பழை) (சோமாவிலக் புகழ்)
எஸ். வி. சுப்பையா, ஜெயா, மீரா, ராம்தாஸ்
உதயகுமார்
நடித்த
மாமியார் வீடு
கதை-வசனம்-டைரக்ஷன்: கே. சொக்கன்

2nd Crowded week
REGAL (Jaffna)
Daily at 8-00, 4-30, 7-00 & 9-30p.m only
Security expert Joe Collins is about to break his own fool-proof system in a Hamburg bank...
The Big bank-heist Is on!
WARREN BEATTY, GOLDIE HAWN
in
"THE HEIST"
(color — adults)

மனோகரா தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
(யாழ். நகர்)
ஏ. வி.எம். ராஜன்-ஜெய்சங்கர் நடித்த
தாய்க்கு ஒரு பிள்ளை
(புதிய பிரதி)
6-10-79 முதல் **அந்தமான் காதலி**

குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்
ஸ்ரீதர் போன் 7345 தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்) 10-30, 2-30, 6-15, 9-45
சிவாஜி - சாவித்திரி - மைனாவதி
நடித்த
குறவஞ்சி
(புதிய பிரதி)

ராஜா தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்) முத்துராமன் - கே. ஆர். விஜயா
சுந்தரராஜன்
நடித்த
இதோ எந்தன் தெய்வம்
(புதிய பிரதி)

2nd CROWDED WEEK
SHANTHI JAFFNA PHONE 7642
Daily 10-30, 2-30, 4-45, 7-00, & 9-30 p.m
"The Golden Voyage of Sinbad"
Magic and Thril —
A Color Film for the Whole Family
பயங்கர மந்திர தந்திரக் காட்சிகள்!
சந்துபாத்தின் வீரதீர சாகசங்கள்!!
Special Schools Shows - Contact Manager.

வெலிங்டன் தினசரி 4 காட்சிகள்
(நல்லூர்) சிவாஜி-வாணிஸ்ரீ
குலமா குணமா

விஜோ போன்: 7693 தினசரி 4 காட்சிகள்
(யாழ் நகர்)
ஹலோ பார்ட்னர்
(புதிய பிரதி)

கடைசி சில தினங்கள் மட்டும்
ராணி தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
(யாழ். நகர்) ஜெய்சங்கர்-கே. ஆர். விஜயா
நாகேஷ் - மனோகர் நடித்த
பட்டணத்தில் பூதம்
(புதிய பிரதி) (ஈஸ்ட்மன்கலர்)

கலைமகள் விழாக்கள்

[யாழ்ப்பாணம்]

யாழ். தபால் தொலைத் தொடர்பு திணைக்கள ஊழியர் நடாத்துகின்ற சரஸ்வதி விழா வீரசிங்கம் மண்டபத்தில் இன்று மாலை நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி க. சண்முகதாஸ், திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் ஆகியோர் சிறப்புரையாற்றுவர்.

மாநில தொலைத் தொடர்பு பொறியியலாளர் அலுவலக ஊழியரின் 'சுப்பிரமணிய பாரதி' நாடகமும், செல்வி சிவகுரு பேரின்பநாயகியின் மாணவிகளின் நடனமும், மகாஜனக் கல்லூரி மாணவரின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

யாழ். அஞ்சல் அலுவலகம், மாநில தொலைத் தொடர்பு பொறியியலாளர் அலுவலகம், பிரதேச நிர்வாக அலுவலகம், பிரதேச கணக்காளர் அலுவலகம், சுண்டிக்குளி அஞ்சல் அலுவலகம், வண்ணார்பண்ணை அஞ்சல் அலுவலகம், பிரதேச அஞ்சல் அலுவலக அத்தியட்சகர் அலுவலகக் என்பன ஒன்றிணைந்து இவ்விழாவை ஏற்பாடு செய்துள்ளன. [கு]

0 0 0

அராலியில்

[அராலி]

அராலி சைவ இளைஞர் மன்றம் நடாத்தும் நவராத்திரி விழா இம்மாதம் 30 ம் திகதி அராலி ஆராமக்குளம் பிள்ளையார் கோவில் மண்டபத்தில் திரு. க. கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறும்.

திருப்பூங்குடி வி. வி. கே. ஆறுமுகத்தின் 'கவியரசியும் காவியமேழும்' என்றபொருளில் விசேலையும், மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். [கு]

0 0 0

பண்ணாகத்தில்

[பண்டத்தரிப்பு]

பண்ணாகம் ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தின் ஆதரவில் இம்மாதம் 30 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெறும். நவராத்திரி விழாவில் 'உயர் வாழ்வுக்கு வழிவகுப்பது மெய்ஞானமா விஞ்ஞானமா' என்னும் பொருளில் பட்டிமன்றம் சர்வோதயப் பிரமுகர் திரு. நாக. பத்மநாதன் தலைமையில் நடைபெறும். கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. [கு]

0 0 0

[பண்டத்தரிப்பு

பண்ணாகம் கண்ணகை மன்றம் நடாத்தும் நவராத்திரி விழா இம்மாதம் 29 ம் திகதி சனிக்கிழமை மாலை பண்ணாகம் ஸ்ரீமுருகன் சனசமூக சேவா சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் எதிர்காலத்தி தலைவர் திரு. க. அமிர்தலிங்கம் 'தமிழருக் சக்தி வழிபாடும்' என்னும் பொருள்பற்றி உரை யாற்றுவார். கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. [கு]

0 0 0

தெல்லிப்பழையில்

[தெல்லிப்பழை]

தெல்லிப்பழை வல்லுலை வரத்தலைக் கற்பகப் பிள்ளையார் கோவில் விஜயதசமி உற்சவம் அக்டோபர் மாதம் 1 ம் திகதி நடைபெறவுள்ளது. புரட்டாதிக் கடைச் சனிவார நவக்கிரக அபிஷேகம் 13 ம் திகதி சனிக்கிழமை காலை நடைபெறும். [கு]

0 0 0

இருபாலையில்

[கோப்பாய்]

இருபாலை எக்ஸ்பிரஸ் இளஸ்ரியூட் நடாத்தும் வாணி விழா இம்மாதம் 30 ம் திகதி நிலைய இயக்குநர் திரு. ந. வரதராஜன் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் வீரமணி ஐயர், சுப்பிரமணிய ஐயர் ஆகியோரின் சொற்பொழிவும், பட்டிமன்றம், கர்நாடக இசை விருந்து, ரி. சீலனின் வீணாகான நிகழ்ச்சி, நாடகங்கள் ஆகியவையும் இடம்பெறும் சிறப்பு நிகழ்ச்சியாக திரைப்படவானொலிக் கலைஞர் திரு கே. எஸ். பாலச்சந்திரனின் பக்கவாத்திய நிகழ்ச்சியும் இடம்பெறும். [கு]

அடம்பனில்

[அடம்பன்]

அடம்பன் மகாவித்தியாலய வாணி விழா இன்று இந்துமாமன்றத் தலைவர் ஆ. சிவசெல்வி இ. குமாரகுலசிங்கம் தலைமையில் நடைபெறும்.

மன்னார் கல்வி அதிகாரி திரு. கே. பாலசுப்பிரமணியம், மாந்தை வட்டாரக் கல்வி அதிகாரி திரு பி. இலகுநாதன் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவாற்றுவர். [கு]

இன்றைய நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

கண்ணை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவிலில் இன்று மாலை விசேஷ பூசையும் அதனைத் தொடர்ந்து 'நாலு பேரைப் பார்த்து நட' என்னும் பொருள்பற்றிய சுப்பிரமணியசாஸ்திரிகளின் சுதாப் பிரசங்கமும் நடைபெறும். [கோ-கி]

பரிசளிப்பு விழா

[யாழ்ப்பாணம்]

ஏழாலை சைவமகாஜன வித்தியாலய பரிசளிப்பு விழாவும் கலைவிழாவும் இன்று வெள்ளிக்கிழமை மாலை வித்தியாலய அதிபர் திரு த. திருநாவுக்கரசு (நாவேந்தன்) தலைமையில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட அமைச்சின் செயலாளரும் அரச அதிபருமான திரு வேலுப்பிள்ளை தவராசாவும், திரு வேலுப்பிள்ளை துரைசுவாமி ஆகியோர் கலந்து கொள்கின்றனர். [கு]

கைதடி சைவச்சிறுவர் இல்ல திருமுறை விழா

(யாழ்ப்பாணம்)

கைதடி சைவச்சிறுவர் இல்லம் இல்லக்கீதம் ஆலோசனை சபையின் அனுசரணையுடன் நடாத்தும் திருமுறை விழா இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று நாளைகள் நடைபெறவுள்ளது.

நாளைய முதல்நாள் நிகழ்ச்சிகள் விளிநோக்கி குருகுல அதிபர் திரு.வே. கதிரவேலு தலைமையில் நடைபெறும். யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. நி. மாணிக்கவாசகர் விழாவினைத் தொடக்கிவைப்பார். பின் உதவி அரசாங்க அதிபர் திரு. கு. கிட்னர், பொன். அ. கனகசபை, புலவர் ஈழத்துச் சிவானந்தன், நி. ஜெயக்குமார் உட்பட பலர் உரையாற்றுவர்.

இரண்டாம்நாள் நிகழ்ச்சிகள் சாவகச்சேரி ஆரம்ப நீதிமன்ற நீதவான் திரு சிவா பாலேந்திரா தலைமையிலும் மூன்றாம் நாள் நிகழ்ச்சிகள் சைவச்சிறுவர் இல்லத் தலைவர் திரு. க. ஞானச்சந்திரன் தலைமையிலும் நடைபெறவுள்ளன.

முத்தையாவின் ஆசிச் செய்தி

இவ்விழாத் தொடர்பாக ஆதிகோஜோதி நா. முத்தையா வெளிவிட்டுள்ள ஆசிச்செய்தியில் "கைதடி சைவச்சிறுவர் இல்லத்தினர் எல்லாரும் திருமுறைவிழா தமிழர் சமூகத்தினருக்கு மிகப் பயனுள்ள ஒன்றாகும்" என்று தெரிவித்துள்ளார். அவரது செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

"அருளொடுகூடி சிவபரம் பொருளுக்கு திரு என்று பெயர் அச்சிவபரம்பொருளோடு இரண்டறக்கலந்த அடியார்கள் தன்மையும் அதியாகக் பாடியபாடல்களே திருமுறைப்பாடல்களாம். முறை என்றால் நூல்என்பதுபோலவே ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு மந்திரமாகும். மந்திரம் நினைப்பவரைக் காப்பது போலவே திருமுறைப்பாடல்களும் ஓதுவோரையும் கேட்போரையும் வாழவைப்பன.

"இத்தகைய திருமுறைவிழா சிறப்பாக நடைபெற எனது வாழ்த்தைத் தெரிவிப்பதோடு இறைவனையும் பிரார்த்திக்கின்றேன்." (கு)

TODAY ONLY
RIO Jaffna Phone: 7607
Daily 10-30 a m. 4-45, 7-00 & 9-30 p m.
"An Elephant Called Slowly"
Special Schools Shows-Contact Manager

நாகம்ஸ் (கல்லூரி)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எஸ். ஜி. ஆர்-சரோஜாதேவி
வேட்டைக்காரன்

வெஸ்லி
(கானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஸ்ரீகாந்த் - பிரமிளா
கோமாதாவின் குலமாதா
(ஈஸ்ட்மன்கலர்-புதியபிரதி)

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

விடைகளைத் தெளிவாக எழுதி உங்கள் பாடசாலைப் பெயருடனும், வகுப்பாசிரியரின் கையெழுத்துடனும், 'ஈழநாடு' கேள்வி கூப்பனுடன் சேர்த்து பிள்ளைகள் விலாசத்திற்கு அனுப்பிவைக்கவும். பரிசுகள் பற்றிய அறிவுப்புகள் பின்னர் தரப்படும்.

ரோட்டேறியன் டாக்டர் பா சோ. பாரதி, பல் வைத்தியசாலை, 568, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

போட்டி முடிவு திகதி: 6-10-79

யாழ். ரோட்டரிக் கழக மாணவர் சுகாதாரப் போட்டிக் கூப்பன்

மாணவனின் முழுப்பெயர்.....

விலாசம்.....

பாடசாலைப் பெயர்.....

வகுப்பாசிரியரின் கையொப்பம்.....

.....

மாணவனின் கையொப்பம்

ஒரு பெண்ணுக்கு வாழ்வளியுங்கள்

ஆண்டவன் மனிதனைப் படைக்கிறபோது, ஏதோ ஒரு குறையையும் அவன் ஏற்படுத்திவிடுகிறான். அமைவில்லை யாரும் மனித வாழ்வில் இடையே புகுந்தேனும் தனது 'திறமை'யைக் காட்டிவிடுகிறான் இறைவன் மனிதனுக்கு ஏதோ குறைபாடு இல்லையெனில் அந்த மனிதன் ஆண்டவனை நினைத்துக்கூடப் பார்க்கமாட்டான் என்பதற்காகத்தான் ஆண்டவன் இவ்வாறான குறைகளை ஏற்படுத்துகிறானோ!

பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்னர் சுன்னாகத்திலுள்ள குராவத்தையில் பிறந்த அந்தப் பெண் குழந்தைக்கு ஆண்டவன் அதனையும் அளித்தான். அந்தப் பெண்ணுக்கு சரணமுத்து தம்பதிகள் லலிதாதேவி எனப் பெயரிட்டு, தமது கவலைகளை மறந்து சந்தோஷமாகவே வாழ்ந்துவந்தனர். காலம் சுழலத் தொடங்கியது

லலிதாதேவிக்கும் சவால்கள் உருவாகின.

லலிதாதேவிக்கு 15வது வயதில் ஆண்டவனும் அவரைச் சோதிக்கத் தொடங்கினான்.



காலனை அனுப்பி, அவரது தந்தையைப் பறித்தான்!

லலிதாதேவிக்கு தந்தையை இழந்த வலி, சற்று மறைந்து வந்த அந்த இரண்டாண்டு காலத்துக்குள்ளேயே அவரது வாழ்வில் மற்றுமொரு பயங்கரம்!

புகையிரத விபத்தில், அவர் இரண்டு கால்களையும் இழந்து விட்டார்!

4-5-77ல் நடந்த விபத்தில் கால்களை இழந்த செல்வி லலிதாதேவிக்கு தற்போது 18 வயதாகிறது.

தன் நிலையை நினைத்து வேதனைப்பட்டு, கண்ணீரே வாழ்க்கையாக எண்ணி வாழ்ந்துகொண்டிருக்கும் அவருக்கு ஒரு 'விடிவெள்ளி'யாக நல்ல செய்தி வெளியாகி விருக்கிறது. அவருக்கு 'பிளாஸ்திரி'க் கால்களைப் பொருத்துவதற்காக, இந்தியாவிலிருந்து அவரை அனுப்பி வைக்கக் தெல்லிப்பழை லயன்ஸ் கழகம் இப்பொழுது முன்வந்திருப்பது நல்ல மகிழ்ச்சியான செய்தியே!

தெல்லிப்பழை லயன்ஸ் கழகம், தானாகவே பணத்தைச் சேகரித்து, அவரை இந்தியாவுக்கு அனுப்பி 'பிளாஸ்திரி'க் கால்களைப் பொருத்த முடிவு செய்துள்ளது. பொதுமக்களிடமிருந்து நிதி உதவியை எதிர்பார்க்கும் லயன்ஸ் கழகத்தினர், உதவ விரும்புவோர் லயன்ஸ் வி. எஸ். மனோகரனிடம் (தலைவர்), தெல்லிப்பழை லயன்ஸ் கழகம், தெல்லிப்பழை என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளனர்.

விபத்தில் காலினை இழந்த ஒரு பெண்ணுக்கு வாழ்வளிக்கப் பரோபகார சிந்தனையுள்ள பெருமக்கள் இதாராளமாக உதவுமாறும் லயன்ஸ் கழகத்தினர் கேட்கின்றனர். இதற்கு முன்னர் அனைவரும் இந்தப் பணிக்கு உதவவேண்டாமா!

...ஒரு நல்லிதயம்

விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள (7 சிறீ) 404 கார் உடனடி விற்பனைக்குண்டு. நாளை சனிக்கிழமை பார்வையிடலாம். சிறீனிவாசா மெரிக்கமநாதன், விநாயகர் வீடு, கே. கே. எஸ் வீதி, மாவிட்டபுரம் என்பதிலோ வாவித் தொழிற்சாலைக்கு முன்பாக) 3703

மக்கினென் டிரவல்சேவிஸ்
(இலங்கை) லிமிட்டெட்

Mackinnon Travel Service
(Ceylon) Ltd

நமக்கு நிகர் ஸ்தாபனத்தை யாழ்ப்பாணத்தில் 8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் நிறுவி இயங்கிவருகிறது!

இங்கு
- உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கெட்
- அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் டிறவலர்ஸ் செக்
- கற்றுலாக்கள்
- பாஸ்போர்ட்

இப்படி எல்லாவசதிகளையும் கொழும்புக்கு செல்லாமலே ஒழுங்கு செய்துகொள்ளலாம்.
உங்கள் பிரயாண ஒழுங்குகளை மக்கினென் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிடெட் ஸ்தாபனத்திடம் ஒப்படையுங்கள்.

மக்கினென் டிறவல் சேர்விஸ்
(இலங்கை) லிமிட்,

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 8154

பயணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது!

இன்று ஆரம்பமாகும் புத்தகக்கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

சீன மக்கள் குடியரசின் முப்பதாவது தேசியதின விழாவை முன்னிட்டு புத்தகக் கண்காட்சியொன்று இன்று திறந்துவைக்கப்படும்.

யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் திரு. க. கைலாசபதியினால் திறந்துவைக்கப்படும். இக்கண்காட்சியில்; சீன சஞ்சிகைகள், ஓவியங்கள், தத்துவார்த்த நூல்கள் மற்றும் கல்வி சம்பந்தப்பட்ட விஞ்ஞான, தொழில் நுட்ப, பொருளாதார நூல்கள், புகைப்படங்கள், 'போட்டோ கலைப்பிரதிகள்' ஆகியனவும் இடம் பெறும்.

இந்த இலவச புத்தகக் கண்காட்சி நாளைவரை யாழ். நிமலர் மண்டபத்தில் நடைபெறும்.

வேம்பிராய் இளைஞர் கொலை:

2 பெண்கள் உட்பட மூவர் றிமாண்டில்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறையில் பாளைக் கத்தி வெட்டுக்கிலக்காகி இளைஞர் ஒருவர் கொலையுண்டது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைதான இரு பெண்களும் ஏற்கனவே சரணடைந்த சந்தேகநபரும் தொடர்ந்து றிமாண்டில் வைக்கப்பட்டனர்.

காங்கேசன்துறை மாம்பிராயைச் சேர்ந்த சந்தன் குருநாதபிள்ளை என்பவர் காதல்திருமண விவகாரத்தில் எதிரொலியாக ஏற்பட்ட தகராறு காரணமாக பாளைக்கத்தியால் பல தடவைகள் வெட்டிப் படுகொலைசெய்யப்பட்டதுதொடர்பாக சந்தேகத்தின்பேரில் காங்கேசன்துறைப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்ட சண்முகம் பரமேஸ்வரி, சண்முகம் புஷ்பராணி ஆகிய இரு பெண்களும் இதுதொடர்பாக தேடப்பட்டு நீதிமன்றத்தில் சரணடைந்த சந்தன் சண்முகம் என்பவரும் றிமாண்டில் வைக்கப்பட்டு நேற்று மீண்டும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்

அச்சமயம் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை மாவிட்ட வைத்திய அதிகாரி திரு. ரகுபதி தமது வைத்திய அறிக்கையைச் சமர்ப்பித்து சாட்சியமளிக்கையில், கொலையுண்டவரைத் தாம் பரிசோதித்த போது முதுகில் பல சந்திவெட்டுக் காயங்களிருந்ததாகவும் அதுவே அவரது மரணத்துக்குக் காரணமெனவும் தெரிவித்தார்.

இதைபடுத்து நீதிபதி திரு எஸ் ஆனந்தகுமாரசாமி சந்தேகநபர்களைத் தொடர்ந்து றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார். (க)

'யாழ் மதி' இன்று வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ் இந்துக்கல்லூரி மாணவர்களின் வெளியீடான 'யாழ் மதி' மாத சஞ்சிகை வெளியீட்டுவிழா இன்று மாலை திருநெல்வேலி சிவமடக் கல்லூரியில் நடைபெறுகிறது.

யாழ் இந்துக்கல்லூரி ஆசிரியர் திரு. இ. மகாதேவா தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் முதலாவது பிரதியை எஸ். ரி. ஆர். பிலிப்ஸ் அதிபர் திரு எஸ். நிமலராஜா வாங்குவார்.

NEW ARRIVAL FOR DEEPAVALI

தீபாவளி பண்டிகையை மகிழ்ச்சியுடன் கொண்டாட

இதோ

மயூரா சின்டிக்கேற்
MAYURA SYNDICATE

ஸ்தாபனத்தாரின் பொருட்கள்

★ ஜில் (Gil) பெல்ஸ். ரூ. 140-00
★ டெனிம்(Denim) ஜீன்ஸ் ,, 160-00
★ மயூரா (Mayura) பெல்ஸ் ,, 130-00
★ ராங்கிலர்(Wranglar) சேட் ,, 120-00
★ கொட்டுறோய் (Corduroy) ஜீன்ஸ் ரூ. 175-00
★ டெனிம் (Denim) ஸ்கேட் ,, 110-00
★ மயூரா (Mayura) ஸ்கேட் ,, 110-00
★ ஜில் (Gil) சிறுவர் பெல்ஸ் ,, 80-00
★ பிளீட்டெட் (அச்சடித்த) ஸ்கேட் (இறக்குமதியானது) Pleated (Printed) skirt (Imported)

மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு.
மயூரா சின்டிக்கேற் ஸ்தாபனத்தாரின் வடபகுதி ஏகவிநியோகஸ்தர்கள்.

லிங்கம் சில்க் ஹவுஸ்

18, நவீன சந்தை, யாழ்ப்பாணம். ... தொலைபேசி: 7684

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் சேர்குவீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No: GB/8948/78 The Eelanadu P.B. No 49; Telegram Eelanadu T Phone 889